*பிரான்ஸ்*

## பாஸ்க் குழுவின் இராணுவ தலைவர் கைது

ஸ்பெயின் நாட்டில் வசிக்கும் தனி இனம் பாஸ்க். இந்த இன மக்கள் தங்களுக்கு தனி நாடு வேண்டும் என்று கோரி ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்திவருகிறார்கள். இதனை எத்தா அமைப்பு நடத்தி வருகின்றது. இந்த இயக்கத்தின் இராணுவ பிரிவு தலைவர் அடா எனப்படும் மிகேல் கபில் கோயிட்ஸ் காரே சரோப் கைது செய்யப்பட்டார். இவருடன் இந்த அமைப்பின் 6வது உயர்மட்டத் தலைவர் கைது



செய்யப்பட்டுள்ளார். அவர் பிரான்சின் தென்மேற்கு பகுதியில் உள்ள பயோன் நகரில் கைது செய்யப்பட்டார். அந்த நகரில் உள்ள ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒரு வீட்டில் காவல்துறையினர் சோதனையிட்டபோது, அங்கு அவருடன் இருந்த ஒரு ஆணையும் பெண்ணையும் அவர்கள் கைது செய்தனர். அந்த வீட்டில் இருந்த ஆயுதங்களையும் காவல் துறையினர் கைப்பற்றினர்கள். இவருக்கு முன்பு இராணுவ பிரிவு தலைவராக இருந்த இபோன் கோகேசாகோச்சாவும் பிரான்சில் இருந்தபோது தான் கடந்த பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கடந்த வாரம் பரிசின் புறநகர் பகுதியான வில்லியே சூர் மார்ன் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான கார் ஒன்றை மறித்து சோதனையிட முற்பட்டபோது காவல் துறை பெண் அதிகாரி நெரின் என்பவர் இயந்திரத் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். அத்துடன், காரில் இருந்தவர்கள் தப்பிய நிலையில், அந்த வாகனமும் வெடித்துச் சிதறியது. இந்த கொலைக்கு பாஸ்க் இன தீவிரவாதிகள் தான் காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இதை தொடர்ந்து பிரான்சில் உள்ள அனைத்து பாஸ்க் தீவிரவாத முகாம்களையும் மூடப்போவதாகவும், அதன் ஆதரவாளர்களை வேட்டையாடப்போவதாகவும் ஜனாதிபதி நிக்கொலா சார்கோசி அறிவித்துள்ளார்.

*அமெரிக்கா*

## ஒபாமாவுடன் கருத்து வேறுபாடு, உளவுத்துறை தலைவர் பதவி விலகல்

விமானத்தில் வெடிபொருளுடன் பயணம் செய்து விமானத்தை தகர்க்க நடந்த முயற்சி, ரைம்ஸ் சதுக்கத்தில் காரில் குண்டு வைத்து வெடிக்க நடந்த முயற்சி ஆகியவை எதிரொலியாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கும், உள்நாட்டு உளவுத்துறை (எப்.பி.ஐ) தலைவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. இதை தொடர்ந்து அவரை பதவியில் இருந்து நீக்க முயற்சி நடப்பதை அறிந்து, அவரே தனது பதவியை விட்டுவிலகியுள்ளார்.



அமெரிக்காவில் கடந்த நத்தார் தினத்தன்று அமெரிக்க விமானத்தில் தீவிரவாதிகள் வெடிகுண்டு வைத்து விமானத்தை தகர்க்க முயற்சி செய்தனர். இதற்காக வெடிபொருளுடன் விமானத்தில் பயணி போல ஒரு தீவிரவாதி பயணம் செய்தபோது, தக்க சமயத்தில் சக பயணி விமானத்தில் பிடித்ததால் விமானத்தை தகர்க்க நடந்த சதி முறியடிக்கப்பட்டது. இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்காவின் புகழ் பெற்ற ‘ரைம்ஸ்’ சதுக்கத்தில் ஒரு காரில் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்தது. அந்த குண்டும் வெடிப்பதற்கு முன்னதாக கண்டு பிடிக்கப்பட்டதால் பெரும் உயிர் சேதம் தவிர்க்கப்பட்டது. இந்தக் குண்டை வைத்தவரும் பின்னர் கைது செய்யப்பட்டார்.

எனினும், அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவுக்கும், அந்த நாட்டின் உளவுத்துறை தலைவர் டென்னிஸ் பிளேயருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அமெரிக்காவின் உளவு அமைப்பான ‘சி.ஐ.ஏ’ இயக்குனரும் பிளேர் மீது குற்றம் சாட்டி வந்தார். இதனால் உளவுத்துறை தலைவரை பதவியில் இருந்து விலக்குவதா என்பது குறித்து ஒபாமா கடந்த சில வாரங்களாக தீவிரமாக ஆலோசித்து வந்தார்.

இந்நிலையில் டென்னிஸ் பிளேர் கடந்த வெள்ளியன்று பதவியை விட்டு விலகினார். பிளேர் 16 மாத காலம் இந்த பதவியில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது பதவி விலகலைத் தொடர்ந்து புதிய உளவுத்துறை தலைவரை நியமிக்க ஜனாதிபதி மாளிகை, திறமை வாய்ந்த பலரது பெயர்களை பரிசீலித்து வருவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

*சீனா*

## அமெரிக்காவுடன் நெருங்கிய இராஜதந்திரத்திற்கு புதிய நிபந்தனை

அமெரிக்காவுடன் நெருங்கிய இராஜதந்திர உறவு வைத்துக் கொள்ள தாங்கள் தயாராகவுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. ஆனால் நெருங்கிய இராஜதந்திர உறவை வைத்துக்



கொள்ள வேண்டுமானால் தாய்வான், திபெத் உள்ளிட்ட எங்களின் உணர்வுப்பூர்வமான விவகாரங்களில் தலையிடுவதை அமெரிக்கா தவிர்ப்பது அவசியம் என்றும் சீனா நிபந்தனை விதித்துள்ளது. சீனா - அமெரிக்க நாடுகளுக்கு இடையேயான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவு குறித்த முதல் சுற்றுப் பேச்சுவார்த்தை பெய்ஜிங்கில் நடந்து வருகிறது.

இதில் இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்துவது தொடர்பாக அமெரிக்காவிடம் 7 பரிந்துரைகளை சீனா முன்வைத்துள்ளது.

இதில் தாய்வான், திபெத் விவகாரங்களும் அடங்கும் என்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள அந்நாட்டுக் குழுவின் செய்தித்தொடர்பாளர் மா ஷாவோஸ தெரிவித்தார். தவிர, சர்வதேச அளவில் பயங்கரவாதம், சுற்றுச்சூழல் மாசு அடைதல் உள்ளிட்ட பொதுவான சவால்களை இரு நாடுகளும் இணைந்து எதிர்கொள்வது தொடர்பாக பேச்சுவார்த்தையின் போது விவாதிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார். பேச்சுவார்த்தையின் முதல்கூட்டத்தில் திங்கள்கிழமை கலந்து கொண்டு பேசிய சீன அதிபர் ஹ ஜிண்டாவோ, அமெரிக்காவும், சீனாவும் தங்களது உணர்வுப்பூர்வமான விவகாரங்களில் தேவையில்லாமல் மூக்கை நுழைக்கக்கூடாது. பரஸ்பரம் மதிப்பளித்து நடக்க வேண்டும் என்று கூறினார்.

தாய்வானையும், திபெத்தையும் தங்களது ஒருங்கிணைந்த பகுதியாக சீனா கூறிவருகிறது. இந்நிலையில் இந்த விவகாரத்தில் அமெரிக்கா அவ்வப்போது தெரிவிக்கும் கருத்துகளால் சீனா அதிருப்தி அடைந்து வருகிறது. சில மாதங்களுக்கு முன்பு திபெத் புத்த மதத் தலைவர் தலாய் லாமாவை அதிபர் ஒபாமா சந்தித்தார். இதற்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்தது.

*ஆப்கானிஸ்தான்*

## நேட்டோ மீதான தாக்குதலுக்கு பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு

ஆப்கானிஸ்தானில் இந்தியத் தூதரகம் மீதும், நேச நாட்டுப் படைத் தளத்தின் மீதும் நடைபெற்ற தாக்குதல்களின் பின்னணியில் பாகிஸ்தானே உள்ளது என்று ஆப்கான் உளவுத்துறை குற்றம் சாட்டியுள்ளது. கடந்த வாரம் ஆப்கானிஸ்தானிலுள்ள நேச நாட்டுப் படைகளின் மிகப் பெரிய தளத்தைக் குறிவைத்து ஆப்கான் தீவிரவாதிகள் நடத்தியத் தாக்குதலில் அமெரிக்க படைகளின் 4 கேணல்கள் உட்பட 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

தெற்கு ஆப்கானிஸ்தானில் காந்தஹார் விமானப் படை தளத்தில் உள்ள இந்த தளம்தான் ஆப்கானிஸ்தானிலேயே மிகப் பெரிய நேட்டோ இராணுவத் தளமாகும். எறிகணைகள், மோட்டார்கள், தானியங்கி துப்பாக்கிகள் உள்ளிட்டவற்றைக் கொண்டு தலிபான்கள் இத்தளம் மீது தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதல் தொடர்பாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நாளிதழான நியூயோர்க் ரைம்ஸ்-க்கு பேட்டியளித்த ஆப்கான் உளவுப் படைத் தலைவர் சயீது அன்சாரி, இத்தாக்குதல் தொடர்பாக இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், இத்தாக்குதல் ஆப்கான் எல்லைக்கு அப்பாலுள்ள நாட்டில் திட்டமிடப்பட்டவை என்றும் கூறியுள்ளார். இத்தாக்குதல் அனைத்தும் எல்லைக்கு அப்பால் உள்ள நாட்டில் இருந்து திட்டமிடப்பட்டே நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் பெரும்பாலானவை எல்லைக்கு அப்பால் இருந்தே கொண்டு வரப்பட்டுள்ளன என்று சயீத் அன்சாரி கூறியுள்ளார்.